பெயர்.திரு.பெருமாள்

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். வயோதிகத்தின் காரணமாக சாட்சியானவர் சாட்சி கூண்டில் இருந்து இறக்கப்பட்டு நாற்காலியில் அமர வைக்கப்பட்டு இருதரப்பினர் முன்னிலையில் சாட்சியம் அளிக்கிறார்.

1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-

1. 1,2 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் ஆமாம். 2-ம் பிரதிவாதி சின்னராஜ் எனக்கு சித்தப்பா பையன் என்றால் சரியல்ல. எனக்கு அக்கா பையன். நானும், பிரதிவாதிகளும் ஒரே ஊரா என்றால் இல்லை. அவர்கள் சாலட்டியிலும் நான் திண்ணையூரிலும் வசித்து வருகிறோம். மேற்படி ஊர்களுக்கு இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். நான் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. நான் அடமான பத்திரம், 2-ம் பிரதிவாதியான சின்னராஜ்க்குத்தான் எழுதி கொடுத்தேன். எப்போது எழுதி கொடுத்தேன் என்றால் மேற்படி ஆவணத்தில் நான் கைரேகை மட்டுந்தான் செய்துள்ளேன். எப்போது எழுதி கொடுத்தேன் என்று தேதி,மாதம், வருடம் நியாபகம் இல்லை. எழுதி கொடுத்து சுமார் 10 வருடங்கள் இருக்கும். எதற்காக எழுதி கொடுத்தேன் என்றால் கஷ்ட நிலையின் காரணமாக ரூ.25,000/- பெற்று கொண்டு எழுதி கொடுத்தேன்.

2. தற்போது நான் எழுதி கொடுத்த அடமான ஆவணம் செல்லாது என்று அறிவிக்க கோரிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்லிய விவரத்தின் அடிப்படையில்தான் எனது வழக்கறிஞர் வழக்குரையை தயாரித்து தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். மேற்படி அடமான ஆவணத்தின் அடிப்படையில் ரூ.25,000-யை கட்டுவதற்கு தயாராக உள்ளேன் என்றும், அடமான ஆவணத்தை செல்லடித்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு எதும் பிரதிவாதிகளுக்கு அனுப்பி உள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கிலாவது மேற்படி அடமான தொகையை வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்த தயராக உள்ளேன் என்று குறிப்பிட்டு உள்ளேனா என்றால் ஆமாம். நான் வழக்குரையில் மேற்சொன்னவாறு அடமான

தொகையை வட்டியுடன் செலுத்த தயாராக உள்ளேன் என்றும் சொல்லவில்லை என்றும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3. நான் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்றும் சொல்வது பொய் என்றும் நான் 1-ம் பிரதிவாதியிடம் ரூ.25,000-யை பெற்று கொண்டு அவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில்தான் 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. பவர் பத்திரமே நான் ஏற்படுத்தி கொடுக்கவில்லை. மேற்படி ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதிக்கு நான் எழுதி கொடுத்த பவர் பத்திரம் பற்றியும், 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரயம் பத்திரம் பற்றியும் தெரியாது என்றும் சொல்கிறனோ என்றால் ஆமாம். 10 வருடத்திற்கு முன்பு அடமான பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லும் நிலையில் எப்போது பணத்தை கட்டுவதற்கு நான் தயாராக இருந்தேன் என்றால் மேற்படி ஆவணம் ஏற்பட்டு ஒரே மாததிற்குள் நான் பணத்துடன் தயாராகத்தான் இருந்தேன்.

4. நான் பணத்தை கட்டுவதற்கு தயாராக உள்ளேன் என்பது குறித்து சின்னராஜிடம் கேட்டேனா என்றால் ஆமாம். ஆனால் அவர் ஒப்பு கொள்ளவில்லை. பத்திர தேதியில் இருந்து ஒரே மாதத்தில் பணத்தை கட்ட நான் தயாராக இருந்தும் சின்னராஜ் மறுத்த நிலையில் மேற்படி பணத்தை கொடுத்து அடமானத்தை செல்லடித்து கொள்ள சட்டப்படியான நடவடிக்கையாக வழக்கறிஞர் மூலம் அறிவிப்போ வழக்கோ தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

5. நான் சொல்வது போல் கடன் வாங்கி ஒரே மாதத்தில் கட்ட தயாராக இருந்தேன் என்றால் அப்போதே வழக்கு தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், மேற்சொன்னவாறு தயாராக இல்லாத காரணத்தில்தான் நான் வழக்கை காலம் தாழ்த்தி பொய் சங்கதிகளை குறிப்பிட்டு தற்போது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. அடமான ஆவணத்தில் யார்? யார்? எல்லாம் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் மேற்படி சாட்சிகளை என் தரப்பில் இருந்து நான் கூட்டிசெல்லவில்லை சின்னராஜாலே அவர்கள் அழைத்து வந்தார்கள். அவர்களது பெயர் தெரியாது. ஒருவர் இருட்டிப்பாளையத்தை சேர்ந்தவர் ஆவார். மேற்படி இருட்டிப்பாளையத்தை சேர்ந்தவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் போது ஆவண சங்கதி குறித்து சார்பதிவாளர் கேட்டாரா என்றால் இல்லை.

7. நான் சொல்வது போல் அடமான ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், கடந்த 29.05.2006-லேயே 1-ம் பிரதிவாதியிடம் இருந்து ரூ25,000-யை கடனாக பெற்று கொண்டு அவர் பெயரில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்து அதன் அடிப்படையிலேயே 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 2006-ம் வருடத்திலேயே கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், மேற்படி விவரங்கள் அனைத்தும் தெரிந்தும் தற்போது வழக்கிற்கு எதிராக 10 ஆண்டுகளுக்கு முன்பாக அடமான பத்திரம் எழுதி கொடுத்ததாக பொய்யாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8. நான் 2006-ல் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட வாசா.ஆ.1 மற்றும் 3 ஆவணங்களை செல்லாது என்று பரிகாரம் கோர வேண்டும் எனில் மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட தேதியில் இருந்து 3 வருடங்களுக்குள் வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் தற்போது 7 ஆண்டுகள் கழித்து காலம் தாழ்த்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

9. கிரய ஆவணத்தை செல்லாது என்று கேட்க வேண்டும் எனில் அதன் மூல ஆவணமான பொது அதிகார பத்திரத்தை முதலில் செல்லாது என்று அறிவிக்க

கோரி பரிகாரம் கேட்டு விட்டுதான் அதற்கு பின்பு ஏற்பட்ட கிரய ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாங்கியதாக சொல்லும் ரூ.25,000 கடனை திருப்பி செலுத்த தயாராக உள்ளதாக பிராதில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. ரூ.25,000-க்கு எவ்வளவு வட்டி பேசி வாங்கி, எவ்வளவு வட்டி செலுத்தி உள்ளேன் என்றால் 2 1/2 சதவீதம் பேசி செலுத்தப்பட்டது. 3 வருடங்களாக வட்டி செலுத்தி வருகிறேன். வருடத்திற்கு மட்டுமே செலுத்தியுள்ளேன். மாதம், மாதம் வட்டி செலுத்தவில்லை. வருட வட்டி எவ்வளவு என்று தெரியாது. வழக்கு சொத்தை 2-ம் பிரதிவாதிதான் ஓட்டி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான்தான் ஓட்டிவருகிறேன். 2-ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 2006-ல் இருந்து வழக்கு சொத்தை அவர்தான் ஓட்டி வருகிறார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சொன்னால் சரியல்ல. அதனால் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

2-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது ஒத்தி வைக்கப்படுகிறது.